(எ-ன்) மேற்கூறியபாவிற்கு அதிதேவதையும், புஷ்பமும, சநதனமும், ஆடையும, ஆபரணமும உணாததுகின்றது

(இ-ள்) வெண்பாவிற்குச சநதிரனும் வியாழமும, ஆசிரியபபாவிற்கு ஆதித்தனும செவ்வாயும், கலிப்பாவிற்குப் புதனும் சனியும், வஞ்சிப்பாவிற்குச சுக்கிரனும இராகு கேதுக்களும் அதிதேவதைகளாம் புஷ்பமும், சநதனமும், வஸ்திரமும், ஆபரணஙகளும் முன்சொனன நிறப பகுதியினாலே கொள்க (எ-று) (௩)

பாட்டுடையோ னூரபபே ரியறபோ படவெதுகை
நாட்டிடினு மபபோ நவிலடியிற்-காட்டுமுதற்
சேர்நத வனுவாகச சீர்முன் னியற்றிடினும்
வாய்ந்தசிறப பெண்கை வழககு.

(எ-ன்) பாடும்வித முணாததுகினறது.

(இ-ள்.) பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரினை யாயினும், இயற்பெயரினையாயினும் அடிமுதற்சீரிலே நிறுத்தி எதுகைத் தொடர்படவைப்பினும், (28) வருக்கமுதலிய அனுவெதுகைத் தொடர்படவைப்பினுஞ் சிறப்பாம் (எ-று) (௪)

---

28. வருக்கமுதலிய அனுவெதுகையின் றன்மையை "வருக்க நெடிலினம் வந்தா லெதுகையும்" என்னும் யாப்பருங்கலக்காரிகையி னுரையிற் கண்டறிக.

வழக்குண் மரபியலு ணோர்ந்து வழுவா
திழுக்கி வடவெழுத்தை யின்பம்-வழுக்காது
முன்னையோர் பாட்டிற் பயின்ற மொழியன்றே
சொன்ன வுறுப்பின் றுணி.

(எ-ன்) உறுப்புச் செய்யுணெறி யுணர்த்துகின்றது

(இ-ள்) வழக்கினோடும் மரபியலோடும் பொருத்த முடையவாய, வடவெழுத்துக்கலவாது கேட்டோர்க்கு மிகவு மின்பமூரிக்குஞ் சொல்லாகச் சான்றோர் செய்யுள்களில் எடுத்துக்காட்டுஞ் சொற்களாற் புணர்க்கப்படுவன வுறுப்புச் செய்யுளாம (எ-று) (ரு)

துணிதற் கரிது பொருளென்றுஞ் சோர்வு [ன்
பணிவுற்ற சொன்மேற் பகுத்தும் - அணிபொருட்ட
மற்றமுண் டென்று முரைப்போர் வழுச்சொல்லின்
இற்றன்றே பாவி னிழுக்கு.

(எ-ன்) குற்றப்படாமற் பாக்களைப் புணர்க்க வென்கின்றது.

(இ-ள்) நிச்சயித்தற்கரிய பொருளுடையவாயினும், எடுத்தேறுபட்ட சொல்லுடையவாயினும், பல பொருளுக்கேற்ற சொல்லுடையவாயினும் பொருந்திற்குற்றமாம (எ-று)

எடுத்தேறுசொல் - இடிபோன்றசொல் (சு)

இழுக்கிலா நாற்குலத்தோ ரெப்பொருளு நேரும்
ஒழுக்கற்ற தெய்வ முடையோர்-விழுக்கவிக்கு
ஈரிரண்டு முத்தமிழு மல்லோரே யெழுப்பாவாம்
சீரார் கவியுரைப்போ ரென்று.

சென்றவிரு பான்மையு டங்கிச் சேருமெழு பயனளவும்
நின்றபரு வத்துறப்பு நீங்காதோர்-ஒன்றில்
அகலாப் பிணியில்லோ ரன்றேபாக் கொண்டு
புகலப் பெறுவார் புகழ்ந்து.

(எ-ன்) அகலக்கவி புகல்வோ ரிவரென்கின்றது

(இ-ள்) இவ் விரு செய்யுளையும் விரித் துரைத்துக் கொள்க (எ-று).

இக்குண மில்லாதார் பாடலாகா தெனபதாம். (௮)

புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காமம்
இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர்-நிகழ்கலைகள்
எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ
நல்லா யவைக்கு நலம்.

(எ-ன்.) அகலக்கவி கேட்பிக்கு நல்லவை நிறையவை யென்னு மிரண்டனுள் நல்லவை கூறுகின்றது.

(இ-ள்) இவ்விலக்கண முடையோரவை நல்லவையாம்.

நலனடக்கஞ் செம்மை நடுவுநிலை ஞானம்
குலனென் றிவையுடையோர் கோதில்-புலனில்லோர்
சென்று மொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிடம்
அன்றோ நிறைந்த வவை.

(எ-ன்) நிறையவை கூறுகின்றது

(இ-ள்.) இவ்விலக்கண முடையோரவை நிறையவை யாம (எ-று).

அவையுடையோருங் குலனுடையோராதல் சிறப்பு (௧0)

அவையின் றிறமறியா ராய்நதமாநது சொல்லார்
நவையின்றித் தாமுரையா நாணார்-சுவையுணரா
ஆய கலைதெரியா ரஞ்சா ரவரன்றோ
தீய வவையோர் செருக்கு.

(எ-ன்) தீயவவை யுரைக்கின்றது

(இ-ள்.) இவ்விலக்கணத்தை யுடையோரவை தீய வவை யாம (எ-று).

இவர்முன் கவிகேட்பிக்க லாகாதென்பதாம.   (கக)

குன்றாநூ லங்கைமறை கோவணங்கோ லுமதீயும்
நன்றாய வேள்வி நுளினமும்-அன்றிக்
குடைசமிதை குண்டிகையுங் கோத்திரமென் றின்ன
உடையாரை யநதணரென் றுன்னு.   (கஉ)

உன்னுதன் மால்கழலை யோங்கியசீ ரங்கிபயன
என்னவுவ மித்த லிவரென்றே-நன்மறைகள்
ஓதலே யோதுவித்தல் வேட்டலே வேட்பித்தல்
ஈத லிரத்தலென் றேத்து.

(எ-ன்.) நாற்குல மென்றவற்றுள் அநதணரியல்பு கூறு கின்றது.

(இ-ள்.) இவ்விலககணமுடையோர் அநதணர் (எ-று) ()

ஏத்திய பூவைநிலை யெல்லோன் கழல்வாழ்த்தல் [ள்
காத்தன் முடிசூட்டல் களம்வேட்டல்-தீத்தொழிலக
வெண்குடைசெங் கோல்கவரி வெற்றியரி யாசனமும
மண்குலவு மன்னர் வளம்.   (கச)

வளர்த்தல் குடிகளையலு சாதாரணகாட வாய்மை
விளைத்தல் பொருணெறியா மெய்ந்நூல்-அளத்தலை
உம்ப ருவமை யுரைகோ ளிவையடையா
இம்ப ருலகுக் கிறை.

(எ-ன்) மன்ன ரியல்புரைக்கின்றது.

(இ-ள்.) இப்பெற்றியுடையோர் மன்னர் (எ-று) (ச௫)

இறையஞ்சா தேருழல்வித் தீதல் புரிந்து
மறைகொண் டழல்வளர்த்து வாய்மை-பொறையுடை
என்றிவையுங் காத்து நிரையோயா லென்பவே [மை
குன்று வணிகர் குணம்.

(எ-ன்.) பூவைசியர் தனவைசிய ரெனபவர்களுள் பூவைசிய ரியல்பு கூறுகின்றது.

(இ-ள்.) இப்பெற்றியுடையார் பூவைசியராம(எ-று) ()

குணங்கொடா காத்தல் தொழுநிதிக்கோன் றன்னை
வணங்க லவன்புகழே வாழ்த்தல்-அணங்கரா
இடதகேகி வாணிகத்தா லீட்டலெரி வேட்டல்
படைத்தோர் வணிகரென் பரா.

(எ-ன்) தனவைசியர் செயதி கூறுகின்றது

(இ-ள்) இப்பெற்றியுடையோர் தனவைசியராம் (எ-று)

பாரதிகழு மூவர் பணித்த பணியொழுகல்
எருழுத லீதல் பிழையாமை-பார்புகழக
கோட்டமிலாமை யொருமைக் குணம பிறவும்
காட்டினா சூத்திரர்தங் கண்.

(எ-ன) சூத்திரா செயதி கூறுகின்றது

(இ-ள) இப்பெற்றியுடையோர் சூத்திரராம் (எ-று). ()

சிறப்புப்பாயிர விலக்கணம்.

கண்ணுய தெய்வ மிறைஞ்சிக் கருது நூல்
பண்ண வதிகாரம் பாரித்தல்-எண்ணும்
மதியோர சிறபபென்பர் வானவரை வாழ்த்தா
அதிகாரமுஞ் சிறப்பென் ருக்கு.

(எ-ன) அகலக்கவிக்கு இன்றி யமையாத பாயிரஙகளுள், சிறப்புப்பாயிரங கூறுமவகை யுரைக்கின்றது.

(இ-ள) தெயவவணக்கமும், அதிகாரமும், புணர்த்துரைப்பதும், அதிகாரமொன்றுமே யுரைப்பதுஞ் சிறப்புப் பாயிரமாம் (எ-று) (கக)

ஆக்கியோன் போவழி யேயெல்லை யாப்பநூற்
போக்கிடஞ்சொல் வோர்நுதலிற் பயன் - தாக்கிய
வெட்டினெடுங் காலங் களங்கா ரணியம்பப் [விவ்
பட்டாலு மபெயரே பன்னு.

(எ-ன) இதுவுமது

(இ-ள) ஆக்கியோன் பெயர்முதல் பயனீருகிய எட்டுமுரைப்பதும், இவற்றுடன் காலம் களன் காரணம் என்னுமூன்றுங் கூட்டியுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம் (எ-று). ()

பன்னிய நூற்பேர் பகர்ந்தோன்பே காரணமும்
துன்னும் பயனளவுஞ் சொல்லினுமமுன்னைச
சிறப்பா மவற்றுட் சிலவேறி னுமு
பெறப்படுமா முன்னைப் பெயா.

(எ-ன்) இதுவுமது.

(இ-ள்) இவ்வைந்தங் கூறுவதும் இவற்றுடன் முன்னை யவற்றுட் சிலவேறக் கூறுவதும் அச்சிறப்புப் பாயிரமே யாம் (எ-று) (உக)

பொதுப்பாயிரத் திலக்கணம்.

பெயரார்நூ லீவோ னியல்பீயும் பெற்றி
அயராது கொள்வோ னளவும்-அயர்வின்றிக்
கோடன்மர பீரிரண்டுங் கூறல்பொதுப் பாயிரமாம்
பாடல்சா னூலின் பயன். (உஉ)

பயனுன்காய் மூவகைத்தாய்ப் பன்மூன் றுரைத்தாய்
இயலுடைத்தாய் மூவாம லேழு-செயன்மதத்தாய்ப்
பத்தாய்க் குணங்குற்றம் பத்தொழிந் தெண்ணான்கா
முத்தியது நூலென் றுரை. (உங)

உரைத்தநதி சீயமோ டொண்பருந்து தேரை
நிரைத்ததொழிற் சூத்திரத்தி னின்று-விரைக்குழலாய்
செம்பொருண் ஞாபகமாஞ் செய்தி நியதியாம்
கம்பமிலா நூலின் கருத்து. (உச)

கருத்தெச்ச நுட்பம் பொழிப்பகலங் காட்டி
உரைத்த வுதாரணமு முண்டேல்-விருத்திடாம்
பூண்ட கருத்தும் பொழிப்பு முதாரணமும்
காண்டிகையென் றோதல் கடன்.

(எ-ன்.) பொதுப்பாயிர விலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) இசசூத்திரங்களை விரித் துரைத்துக்கொள்க.

கடனு மகரவா காரங் கதிரோன
உடனு யெழுங்கடிகை யோரா-றிடனுகி
ஏனை யுயிர்க்கூறு மிவ்வகையால் வநதுதித்தால்
ஆனமுதன் மூன்று மழகு.

(எ-ன்) அகலக்கவி கேட்பிக்கும் முகூர்த்த முணர்த்து கின்றது.

(இ-ள்) அகார ஆகாரமும், இகர ஈகார ஐகாரமும், உகர ஊகார ஔகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும் முறையே உதயாதி அவ்வாறு நாழிகை யுதிக்கு மிவற்றுள், முதன் மூன்று நாழிகையும் உத்தமம, பின்மூன்று நாழிகையு மாகா (எ-று)

இவ்வைநது கூற்றெழுததுக்களை முதலிலுடைய பாக்க ளுக்குச சொன்னகாலத்தில் முற்கூற்றி லரஙகேறறுக வென் பதாம். (௨௬)

அழகாக முன்மொழிக்க ளுராய்ந் தனவும்
அழகாகச் சொல்லினவு மன்றி-அழகாகச்
செய்யுட் குரைத்தனவு மெல்லாஞ் செயிர்தீரச்
செய்யினன் றன்றுயிற் றீது. (௨௭)

தீதிலா நூலுரைத்த தீதிலாச செய்யுளைத்
தீதிலோர் நல்லவையிற் சேர்த்ததற்பின்-ஆதிசால்
பாவிற் கியைய வுரைக்கிற் பலபொருளும்
தாவில் பொருளோடுஞ் சார்ந்து. (௨௮)

சாந்தின் மெழுகித் தரளத் திரள்பரப்பிக்
காந்தி மணிகனகங் கண்ணுறீஇ-வாய்ந்தலர்ந்த
தாமமு நாற்றி விளக்கிட்டுச் சாறவிசில்
நாமகளை யேற்றுவித்த னன்கு. (௨௯)

நன்குணர்ந்தோ ராய்ந்த தமிழ்நூலி னன்னெறியை
முன்புணர்ந்து பாட்டியனூன் முற்றுணர்ந்து-பின்புண
நல்லார்முன் னல்லாய் நலமார் கவிபுரைக்க [றும
வல்லாத லன்றோ மதி. (௯௰)

பொதுவியல் முற்றிற்று.



அவையடக்கம்.

என்களங்கம் யாவையு நீக்கி யினிதருளி
நன்களந்தை நூலோடு நாட்டுவரால்-தென்களந்தை
மன்பெயரா வண்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
தன்பெயரா னாட்டுந் தமிழ். (௯௧)

வச்சணந்திமாலை முற்றிற்று.



வரையறுத்த பாட்டியல்.

மூலமும், உரையும்.



கட்டளைக்கலித்துறை.

பார்கொண்ட சோதியன் சம்பந்த மாமுனி பாத மலர், நேர்கொண் டிறைஞ்சி நிகழ்த்துகின் றேனெடு நூல்சுருக்கி, ஏர்கொண்ட சொற்புல வோர்செய்த பாட்டியல் கற்கமிக்க, சீர்கொண்ட மாமதி யில்லாத வர்க்குத் தெரிவுறவே. (க)

தெரியாது வந்த வழியடை யாளஞ் சிலர்தமக்கு, மரியாதை யின்றென் மதியின்மை யாற்சொன் மழலைப்புன்சொல், பெரியோர் பொறுப்பர்தம் பேரறி வாண்மையும் பேதைமைபோய், விரியாத வென்னறி வின்மையும் பாரில் விளங்குதற்கே. (உ)

விளக்கிய மங்கல மேமுத லாக விரித்த பத்தும், துளக்கற நாடும் பொருத்தமென் றேயெல்லை சொல்லறியா, உளக்கவி வாண ரெனைபோல நாடொறு மூண்பொருட்டால், வளக்கவி பாடிப் பிழைப்பதிந் நூலின் வரும்பயனே. (௩)

சீர், எழுத்து.

வருகின்ற மங்கலச் சொல்லினுட் சீர்கொள்க வாய்ந்தகக்கா, அருகொன்று கிக்கீசொச் சோக்கணங் காவொ டடுத்தநிங்கீ, தருகின்ற யாவொடு வவ்வாவிவ

விபபெயா தஙகளுககு, முருகொன றெழுததுநா
நாயூப பெயாக்கு மொழியாகன்றே.

(எ-ன்) சீர் எழுத்து என்னு மிரண்டும மஙகலச சொல
லிற்குப் பொருநதிய பெயர்களை யுணர்த்துத லுதலிற்று

(இ-ள்) க, கா, கி, கீ, சொ, சோ, ந, நா, நி, நீ, யா,
வ, வா, வி, வீ என்னும் எழுத்துக்களை முதலாக வுடைய
பெயர்களுக்குச் சீரென்னு மஙகலச சொல்லால் சீர்கொண்ட,
சீர்தநத, சீரேறு என்றும், நு, நூ, யூ என்னு மெழுத்துக்களை
முதலாகவுடைய பெயர்களுக்கு எழுத்தென்னு மஙகலச்சொல்
லால் எழுதரிய (எ-ம்) பாவிற் இயைநதபடி பாடுக (எ-று). ()

பொன், பூ.

மொழிபொன்குக் கூவுஞ்சௌ காரநதுத் தூவு
மூரணிதெத்தே, அழிவில்நெந் நேயொடு புப்பூமெம
மேயொ டகன்றமொம்மோ,வழுவின் மௌ காரப்பெய
ர்க்குரை பூக்கொண் டிசைக்கக்கௌசை, வழிகொண்
மம மாமிம்மீ மும்மூவை காரவெள காரங்கட்கே.

(எ-ன்.) பொன் பூவென்னு மிரண்டு மங்கலச்சொல்லிற்
குப் பொருநதிய பெயர்களை யுணர்-ற்று.

(இ-ள்.) கு, கூ, சௌ, து, தூ, தெ, தே, நெ, நே,
பு, பூ, மெ, மே, மொ, மோ, மௌ என்னு மெழுத்துக்களை
முதலாகவுடைய பெயர்களுக்குப் பொன்னென்னும் மங்கலச
சொல்லால் பொன்னுகும், பொன்கொண்ட, பொன்பயில்,
பொன்வளர், பொண்கிளர் (எ-ம்), கௌ, சை, ம, மா, மி, மீ,
மு, மூ, வை, வெள என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய
பெயர்களுக்குப் பூவென்னு மஙகலச் சொல்லால் பூக்கொண்டு
பூமேவு, பூவணி (எ-ம்) பாவிற்கியைநதபடி பாடுக (எ-று). (௫)

திரு, திங்கள், மணி, நீர்.

வெள்ளரு திருத்திங்க ளென்சொற்கள் கொக்கோ வரும்பெயர்க்காம், செவ்வுண் மணிச்சொற்கெக் கேப் பெயர்க் காஞ்செழு நீர்ச்சொற்கையோ, டிவ்வுண்சிச் சீயொடு தித்தீத்தை நொநோநேர் வுடனிசையக், கௌவுய மைபகாரப் பெயர்க்குநன் ருமபடி கட்டுரையே.

(எ-ன) திரு, திங்கள, மணி, நீர் என்னு நான்கு மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணா-ற்று

(இ-ள்) கொ கோ என்னு மெழுத்துக்களை முதலாக வுடைய பெயர்களுக்குத் திருவெனனு மஙகலசசொல்லால் திருமகள், திருவளர், திருப்பதி, திருமல்கு, திருமன்னு (எ-ம), திஙகளென்னும் மஙகலசசொல்லால் திஙகளூர் திஙகளால் (எ-ம்), கெ கே என்னு மெழுத்துககளை முதலாகவுடைய பெயூகளுக்கு மணியென்னு மஙகலசசொல்லால் மணிவளா, மணிதிகழ், மணிமேவு, மணிமன்னு, மணிதஙகு (எ-ம்), கை, சி, சீ, தி, தீ, தை, நொ, நோ, பை என்னு மெழுததுக்களை முதலாகவுடைய பெயாகளுககு நீா எனனு மஙகலசசொல்லால் நீர்கொண்ட நீர்மேவு, நீர்கிளா (எ-ம) பாவிற்கியைநதபடி பாடுக (எ-று) (ரு)

சொல், கங்கை, வாரணம.

கடடுரைசொற்கொ ளௌகாரஞ் சுசசூககள் செச சேககள தௌநௌ, ஒடடுரை போக்கினி தாங்கங்கை அஆஒஔககள் தத்தா, விட்டுரை தொத்தோ விழை யோப பெயாகளுயா யானையின்போப,- படடுரை வா ரணங் கொண்டுஞெஞ ஞொபபெயர் பாடுகவே.

(எ-ன்) சொல், கஙகை, வாரணம என்னு மூனறு மங கலசசொல்லிறகுப பொருநதிய பெயர்களை யுணர்-ற்று.

(இ-ள்) ஒள, சு, சூ, செ, சே, தௌ, நௌ என்னு மெழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குச் சொல்லெ ன்னு மங்கலச்சொல்லால் சொற்கொண்ட (எ-ம்), அ, ஆ, ஒ, ஓ, த, தா, தொ, தோ, யோ என்னு மெழுத்துக்களை முதலாக வுடைய பெயர்களுக்குக் கங்கையென்னு மங்கலச்சொல்லால் கங் கைசூழ், கங்கைநீர், கங்கைசேர் (எ-ம), ஞெ ஞொ என்னும் எழுத்துக்களை முதலாகவுடையபெயர்களுக்கு வாரணமென்னு மங்கலச்சொல்லால் வாரணஞ்சூழ் (எ-ம்) பாவிற்குப் பொருந் தியவாறு பாடுக (எ-று).

கங்கையென்னும் மங்கலச்சொல்லுக்குப் பரியாயமாகக் கடல் காரென்னு மங்கலச் சொற்களைக்கொண்டு கடல்செறி கடல்வளை (எ-ம்), கார்கொண்ட காரேறு (எ-ம்) பாடினு மிழுக்காது. (எ)

குஞ்சரம், உலகு, பார்.

பாடியா குஞ்சரம இஈயு ஞாவும பகர்பெயர்க்காம்,
நீடுல கங்கெர்டு பபபாப பெயர்கரு நிரந்துரைக்க, பீடுறு
பார்கொடு சசசாப்பெப பேபொ டொளிர்ந்தபொப்
போ, நாடுவெவ் வேழுத னண்ணிய பேர்க்கு நயந்
துரையே.

(எ-ன்) குஞ்சரம, உலகு, பார் என்னு மூன்று மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்:ற்று.

(இ-ள்.) இ ஈ ஞா என்னு மெழுத்துக்களை முதலாக வுடைய பெயர்களுக்குக் குஞ்சரமென்னு மங்கலச்சொல்லால் குஞ்சரஞ்செறி, குஞ்சரம்பின், குஞ்சரம்பொலி (எ-ம்), ப பா என்னும் எழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்கு உல கென்னு மங்கலச்சொல்லால் உலகெலாம் (எ-ம்), ச, சா, பெ, பே, பொ, போ, வெ, வே என்னு மெழுத்துக்களை முதலாக வுடைய பெயர்களுக்குப் பாரென்னு மங்கலச்சொல்லால் பார்

கொண்ட பார்மேவு (எ-ம்) பாவிற்குப் பொருந்தியவாறு பாடுக (எ-று). (அ)

தேர்.

உரைதரு தேர்கொடு உஊஎஏஐ யுவந்த நைமை, விரைதருபோர்கட்குநேரே விளம்புக மேவுதண்ணீர்த், திரைதரு வேலை யுடனேசெஞ் சேலையுஞ் சேர வென்று, வரைதரு மஞ்சனநதோய்ந்தரி சிந்திய வாள் விழியே.

(எ-ன்.) தேரென்னு மஙகலச சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்-ற்று.

(இ-ள்.) உ, ஊ, எ, ஏ, ஐ, நை, மை என்னு மெழுத்துக களை முதலாகவுடைய பெயர்களுக்குத் தேரென்னு மஙகலச சொல்லால் பாவிற்குப் பொருந்தியவாறுபாடுக (எ-று).

மேவுதண்ணீர் வாள்விழியே என்பது மகரஉ முன்னிலை.

வாளா வுரைப்பிற்றென் னூலோர் வகுத்த வருண முண்டி, கேளார்ந்த நல்ல கதிகண மாய்ந்துரை கேழ்கிள ரத், தாளார் கமலமு நீலமும் போன்று தருக்கிமுட்டி, நீளா மதர்த்தரி சிந்திய வாட்க ணிரைவளையே.

(எ-ன்.) இந்நூலினொழிபு கூறுகின்றது.

(இ-ள்.) இச்செய்யுளுக்குப் பொருள் விளங்கிக்கிடந்தமை யின் விரித்துரைத்துக்கொள்க

வரையறுத்த பாட்டியல்

முற்றிற்று.



†சிதம்பரப்பாட்டியலின்

பொருத்தவியல்.

—o—

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பகாசெய்யுண் மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம்
  பாலுண்டி வருணநாட் கதியே யென்று
புகரில்கண மெனப்பத்தும் பிறங்கு கேள்விப்
  புலவர்புகழ் முன்மொழிக்குப் புகல்வர் செம்பொற்
சிகரகிரி யெனப்பணைத்துப் புடைத்து விம்மித்
  திரண்டெழுந்து வளர்ந்திளகிச் செறிந்த கொங்கைத்
தகரமலர்க் குழற்கருங்கட் குமுதச் செவ்வாய்ச்
  சரிவளைக்கைக் கொடியென்னத் தயங்கு மாதே.

இப்பா வென்னுதலிற்றோவெனின், இச்சொன்ன பத்துவகைப்பொருத்தமுஞ் செய்யுண் முதன்மொழிக்காமா றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) அவையாவன: மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் இவை பத்து முதன்மொழிக்கிய லென்றவாறு. (௧)

மாமணிதேர் புகழமுத மெழுத்துக் கங்கை
  மதிபரிதி களிறுபரி யுலகஞ் சீர்நாள்
பூமலைகார் திருக்கடனீர் பழனம் பார்சொற்
  பொன்றிகிரி பிறவுமுதன் மொழிச்சீர்க் காகும்

---

† பொருத்தச் சிதம்பரப் பாட்டியலென்றும் சில பிரதிகளிற் காணப்படுகின்றது

நாமவகை யுளிசேர்தல் பொருள தின்மை
நலமிலதாய் வைத்தல்பல பொருளாய்த் தோன்ற
லாமினிய சொல்லீறு திரிதல் போலு
மாதிமொழிக் காகாவா னந்த மாமே.

இப்பா வென்னுதலிற்றோவெனின், செய்யுண் முதன் மொழிக்கு மஙகலச்சொல்லாமா றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) மஙகலச்சொல்லாவன: மா, மணி, தேர், புகழ், அமுதம, எழுத்து, கங்கை, மதி, பரிதி, களிறு, பரி, உலகம், சீர், நாள், பூ, மலை, கார், திரு, கடல், நீர், பழனம், பாா, சொல், பொன், திகிரி இவை யிருபத்தைநது முதன் மொழிககாமென்பது.

'பிறவும்' என்றதனுல் அருநததி, ஞெண்டு, அறுகடல், சங்கு, தார், விசும்பு, புவி, கயல், முரசு, கவரி, தோகை இவையுமா மென்றவாறு.

ஆகாச்சொல்லாவன: நாம வகையுளிசேர்தல் - செய்யுண் முதற்பாவினும் ஒருபாசசொல்லில் அப்பா வொருவழிச சீா சிதைநதும் ஒருவழிசசீர் சிதையாமலும் பாடுதல் வகையுளியா மெனபது அதற்குதாரணம்

"கடியார்பூங் கோதை கடாயினன் றிண்டேர்
சிறியாடன் சிற்றில் சிதைந்து".

இதனுள், கடியாரென்றும் பூங்கோதையென்றும் புளிமா வாகவும் தேமாஙகாயாகவும், கடாயினனென்று கருவிளமாகவு மிவ்வாறலகிடின் ஆசிரியத்தளையுங் கலித தளையுந் தட்டும்;வெள்ளைத்தன்மை குன்றிப்போம்; "சீர்களிற் புல்லா தயற்றளை" என்னு மிலக்கணத்தோடு மாறுகொள்ளு மாதலால் இதனைக் கடியார்பூவென்று புளிமாஙகாயாகவும், கோதையென்று தேமாவாகவு மலகிடிற் சீர் சிதையாதாம் பிறவுமன்ன. பொருள தின்மை-பொருளில்லாமல் வைத்தல்; அஃதுவருமாறு:—இறிஞி முதலாயின வெனக. நலமிலதாய

வைத்தலாவது சீரணங்கு மேவுமென்ற சொல்முதலாயின வென்க. பல்பொருளாயத் தோன்றலாவது ஒருசொற் பல பொருளாயத்தோன்றல்; அஃதாவது அரியென்பது சிங்கமோ வண்டோவென்று ஐயப்படுவது. சொல்லீறுதிரிதல் காரணிசொற் றேன்றனன்று, கடனன்று, பொன்னன்று இவை முதலாயினவென்க. இவையெல்லாஞ் சொல்லானந்தக் குற்றமென்றவாறு. (௨)

ஆனவெழுத் தொன்பதே ழைந்து மூன்று
மாகாதெட் டாறுநான் காதிச் சீர்க்கே
யூனமிலா அஆவும் இஈ ஐயும்
உஊவும் எஏயும் ஒஓ ஔவுந்
தானமிதை வகையாமந் தாதி தன்னிற்
றலைவன்பேர் முதலெழுத்திற் பால ஞதி
மேனிரையெண் ணிற்பால குமார ராசர்
வேண்டிடுமவேண் டாவிருத்த மரணந் தானே.

இப்பா வென்னுதலிற்றோவெனின், முதன்மொழிக்கண் வருமெழுத்துந தானமு முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்) அவற்றுள் ஆகியவெழுததாவன:—ஒற்றுக்கூடின ஒன்பதும், ஏழும், ஐநதும், மூன்றுமாமென்ப; ஆகாவெழுத் தாவன:—எட்டு, ஆறு, நான்கு ஆகாவென்ப; இரண்டெழுத்துச் சொல்லாத தென்னேவெனின், முன்மொழியாதலான் மூவசைச சீரின்மையின் மறுக்கப் பட்டனவென்க. தானம் ஐநதாவன:—அ ஆ பாலன், இ ஈ ஐ குமாரன், உ ஊ ஔ ராசன், எ ஏ விருத்தன், ஒ ஓ மரணமென்று சொல்லப் பட்டவையுள், உயிர்க்குறிலான அ இ உ எ ஒ என்னும் ஐந்தி னுடன் தமக்கொத்த வுயிர்நெடிலான ஆ ஈ ஊ ஏ ஓ என்னும் ஐந்தையுஞ் சேர்த்து, இகரத்துடனே ஐகாரமும், உகரத் துடனே ஔகாரமுஞ்சேர்த்தால் அ இ உ எ ஒ என்னும் அவை பால, குமார, ராச, விருத்த, மரணமாம். இவற்றுள், உயிரும் உயிர்மெய்யென்று சொல்லப்பட்ட தொகையெல்லாம்

ஐந்துபங்காயடங்கும். உயிர்மெய்கள் ஐந்துபங்கா யடங்குவ தெப்படியென்னில், வருக்கைப்பாடத்தின்படி அகரத்துக்குக் ககரமும், இகரத்துக்குக் கிகரமும், உகரத்துக்குக் குகரமும், எகரத்துக்குக் கெகரமும், ஒகரத்துக்குக் கொகரமும், மற்ற நீண்ட வுயிர்மெய்களும், ஐயம் ஔவும் உயிர் சேர்ந்தது போலச்சேர்ந்து, உயிர் பன்னிரண்டும் ஐந்துபங்காயானது போல உயிர்மெய்களெல்லாம் ஐந்துஐந்து பங்காயடங்கும் அவையிற்றைப் பாட்டுடைத் தலைவன் பேர்முதலெழுத்து எதுவோ அதுவே பாலனாகக்கொண்டு மங்கலசொல்லின் முதலெழுத்தைத் தானத்தடைவே யந்தாதியாயெண்ணிப் பாலகுமார ராசன் இவைபொருந்துந்தானம்;விருத்தம் மரணம் இவை பொருந்தாத தானமென்று சொல்லுக என்றவாறு. (௩)

மருவுகுறி லாணெடில்பெண் ணவரி வர்க்கா
மயங்கினுமாம் வரலாகா பேடொற் றுய்த
முரியகச தநபமவ வேழோ டாதி
யுயிர்க்குறிலுன் கிவையமுத மாதிச் சீர்க்கு
மரியதசாங் கத்தயற்கு நலம தாகு
மமுதமொழிக் கல்லாத வெழுத்துங் கான்மாத்
திரையளவஃ கேனமுடன் மூன்று நஞ்சாய்க
செபபுமெழுத் திவையெலலாந் திதா மன்றே.

இப்பா வென்னுதலிற்றோவெனின், ஆண் பெண் இருபாலுக்கும் அமுதம்நஞ்சென்னு முண்டியு முணர்த்துதனுதலிற்று

(இ-ள்.) அவற்றுள், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும ஆணெழுத்து; உயிர்நெடிலும் உயிர் மெய்நெடிலும் பெண் ணெழுத்தாதலால் ஆண்பாற் புகழுமிடத்து ஆணெழுத்துச சிறப்பு, பெண்பாற்புகழுமிடத்துப் பெண்ணெழுத்துச்சிறப்பு. 'மயங்கினுமாம்' என்றதனால் ஆணுக்குப் பெண்ணெழுத்தும் பெண்ணுக்குஆணெழுத்தும்வருதலுமாமென்று. "பாவின்கிழத்தி நாமகளாதலிற் பெண்ணெழுத்தல்லது முன்வைத் துரையார்" என்றார்பிங்கலனார். வரலாகாபேடொற் றுய்தவென்பதொற்றும்

ஆய்தமும் அலி; இவை முன்மொழிக் காகாவெனக. அமுத வெழுத்தாவன:—க ச த ந ப ம வ அ இ உ எ இவை யமுத வெழுத் தென்றவாறு. இவை முதற்சீர்க்காகும்; தசாங்கத் தயற்குமாம்.

நஞ்செழுததாவன:—அமுதவெழுத்தல்லாதவெழுத்தும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும், உயிரளபெடையும, ஒற்றளபெடையும், ஆய்தமுமாம்; இவை முதன்மொழிக்கண் வைக்கிற் றீதாம். (ச)

தீதிலுயி ரீராறு முதலொற் றாறுந்
திருமறையோர்க் கடைவேயோ ராறும் வேந்தர்க்
கேதில்லவ ரனக்கள்வணி கர்க்கா மற்றை
யெழுத்துளவை சூத்திரர்க்கா மியன்ற சாதி
யோதிமன்றன் படைபபுயிரே யரன்மால் செவ்வே
ளுமபர்கோன் பரிதிமதி மறலி நீர்க்கோன்
காதலள கேசன்முத லிவ்வி ரண்டாய்க்
கம்முதன்மூ வாறொற்றுங் கருதிச் செய்தார்.

இப்பா வென்னுதலிற்றோ வெனின், வருணமுந் தோற்றமு முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அவற்றுள், அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ க ங ச ஞ ட ண இவைபதினெட்டு மந்தணர்க்காம்; த ந ப ம ய ர இவையாறும் அரசர்க்காம்; ல வ ற ன இவை நான்கும் வணிகர்க்காம்; ழ ள இவையிரண்டுஞ் சூத்திரர்க்கா மென்றவாறு.

இனித் தோற்றமாவன:—அயன்படைப்பு உயிர் பன்னிரண்டுமாம்; அரன்படைப்பு க ங; திருமால்படைப்பு ச ஞ; செவ்வேள் படைப்பு ட ண; இந்திரன் படைப்பு த ந; சூரியன் படைப்பு ப ம; சந்திரன் படைப்பு ய ர; இயமன் படைப்பு ல வ; வருணன் படைப்பு ழ ள; குபேரன் படைப்பு ற ன. இவர்கள் ஒன்பதின்மரும் பதினெட்டு மெயயும் படைத்தாரெனக. (ரு)

கருதுமுபி ரடைவேநான் கைந்து மூன்று
காா்த்திகையே பூராட முத்தி ராட
முரணறுகவ் வரியினுன் கிரண்டு மூன்று
மூன்றோண மாதிரையே புனா்தம் பூச
மிருமைகொள்சவ் வரியினுன் கைந்து மூன்றி
ரேவதியச் சுவனிபரணி ஞகர மூன்று
வருமவிட்டந் தகரமிரண் டேழு மூன்று
வளர்சோதி விசாகமே சதைய மன்னும். (சா)

சதிதிகழ்நவ் வினிலாறு மூன்று மூன்றுந்
தருமனுடங் கேட்டையே பூரட் டாதி
திதமிகுபவ் வரியினுன் கிரண்டோ டாறுத்
திரமூதன்மூன் றுமவ்வி லாறு மூன்று
மித்முடன்மூன் றும்மகமா யிலியம பூர
மியாவுத்தி ரட்டாதி யூயோ மூல
முதவியவம் முதனுன்கு மொழிந்த நான்கு
முரோகணியா மிருகசீ ரிடமாம் பேர்நாள்.

இப்பாவிரண்டு மென்னுதலிற்றோவெனின், பேர்நா ளுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அவையாவன:—அ ஆ இ ஈ கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ பூராடம், ஒ ஓ ஔ உத்திராடம், க கா கி கீ திருவோணம், கு கூ திருவாதிரை, கெ கே கை புனர்பூசம், கொ கோ கௌ பூசம், ச சா சி சீ இரேவதி, சு சூ செ சே சை அசுவனி, சொ சோ சௌ பரணி, ஞ ஞா ஞெ அவிட்டம், த தா சோதி, தி தீ து தூ தெ தே தை விசாகம், தொ தோ தௌ சதையம், ந நா நி நீ நு நூ அனுடம், நெ நே நை கேட்டை, நொ நோ நௌ பூரட்டாதி, ப பா பி பீ உத்திரம், பு பூ அத்தம், பெ பே பை பொ போ பௌ சித்திரை, ம மா மி மீ மு மூ மகம், மெ மே மை ஆயிலியம், மொ மோ மௌ பூரம், யா உத்திரட்டாதி, யூ யோ மூலம், வ வா வி வீ ரோகணி, வெ வே வை வௌ மிருகசீரிடம். ஈகார லகாரம்வந்தால் இகாரமாக ஒட்டிக்கொள்க. (எ)

போநாளுற் பவனுளா தன்மூ வொனபான
பிறித்தொன்று மூன்றைந்தே ழாகா தெட்டாங்
கூரிரா சியும்வயினு சிகமு மாகா
குறில்வன்மை யீரெழிக்கில் வானோர்க் காகும்
நேர்நெடிலின் முதல்நான்கி றில்லா மென்மை
நிலமக்கள் கதிமுதற்சீர்க் காகும் ஒஓ
வேர்மருவு யரலழற விலங்கா மற்றை
யெழுத்துநர கக்கதிமுன் னிவைவா ராவால்.

இப்பா வென்னுதலிற்றோவெனின், நாட்பொருத்தமுங் கதியு முணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) இறைவன்பேர் நாளாத லுற்பவித்த நாளாதல் முதல்வைத்துப் பிரபந்த மஙகலசீர் மொழிக்குமுதலெழுத் தீருக எண்ணி யிருபத்தேழுநாளையு மூவொன்பதாகப்பிரித்து ஒன்றும் மூன்றும் ஐந்தும் ஏழும் ஆகாதநாள்; எட்டாமிராசி யாகிய பதினேழாநாளும் பதினெட்டாநாளும வைநாசிகமாகிய இருபத்திரண்டாநாளும்இவையாகாவென்றவாறு. கதியாவன: அ இ உ எ நான்குயிரும், க ச ட த ப என்னும் வல்லெழுத்தைந்தும் இவையொன்பதும் தேவகதி; ஆ ஈ ஊ ஏ என்னும் நான்குநெட்டுயிரும், ங ஞ ண ந ம என்னுமெல்லெழுத்தைந்தும் ஆக ஒன்பதும் மக்கட்கதி; இவையிரண்டுமுதற் சீர்க்காகும். ஒ ஓ என்னும் உயிரிரண்டும், ய ர ல ழ என்னும் இடையெழுத்து நான்கும், றகரமும் இவையேழும் விலங்கின்கதி; ஐ ஔ என்னும் உயிரிரண்டும், வ ள ன என்னும் மூன்றும் ஆய்தமும் இவையாறும் நரகர்கதி; இவையிரண்டும் விலக்கப் பட்டன வென்றவாறு. (அ)

வானிலகு நேர்குருவே நிரையாம் வெண்சீர்
வருநபுத சகணநாட் பரணி மும்மீன்
ஊனமிகு புனர்பூசம் பூசம் வானு
ளுற்றபுகழ் சூனியநோய் பலன்க ளாகுந்

தேனனையாய் வஞ்சிச்சீ ரடைவே நான்கும்
திகழ்செரம யகணநாட் சோதி யாரல்
தானமுறு கேட்டைசத யந்தான் கேடு
சாவுதிரு மகிழ்ச்சிபலன் றரத்தொ டங்கும்.

இப்பா வென்னுதலிற்றோவெனின், சீருங் கணமும் நாளும் வரும்பலம் ஆமாறுணர்த்திற்று.

(இ-ள்.) இலகு நேர், குரு நிரை, நேரசை யிறுதியாகிய மூவசைசசீர் நான்கும் வெண்பாவுரிசசீரெனப்படும். அவையாவன:—நேர் நேர் நேர் தேமாஙகாய்; நிரை நேர் நேர் புளிமாங் காய், நிரை நிரை நேர் கருவிளஙகாய; நேர் நிரை நேர் கூவிளங காய; இநத நான்குசீருக்கு முரியகணம்: நகணம், பகணம், தகணம், சகணம் இந்த நான்குகணத்துக்கும் நாள்: பரணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் இவை நான்கிற்கும்பலன்: வாழ்நாள் புகழ் சூனியம் நோய் என்பது தேனனையாய் என்பது மகடூஉ முன்னிலை நிரையசைச்சீ ரிறுதியாகிய மூவசைசசீர்நான்கும் வஞ்சியுரிசசீ ரெனப்படும். அவையாவன: நேர் நேர் நிரை தேமாஙகனி, நிரை நேர் நிரை புளிமாஙகனி, நிரை நிரை நிரை கருவிளஙகனி, நேர் நிரை நிரை கூவிளஙகனி; இந நான்கு சீருக்கு முரியகணம்: செகணம் ரகணம் மகணம் யகணம்; இந நான்கு கணத்துக்கும் நாள்: சோதி கார்த்திகை கேட்டை சதயம்; இநநான்கின்பலன்: கேடு சாவு திரு மகிழ்ச்சி யென்ற வாறு. நகணம் பகணம் மகணம் யகணம் இநநான்கு முதன் மொழிக்கு வைக்கப்படும். தகணம், செகணம், சகணம், ரகணம் இநநான்கு கணமும் விலக்கப்பட்டன. (கூ)

துறக்கமதி வான்பரிதி காய்ச்சீர் முன்னுஞ்
சூழ்காற்றுத் தீநிலநீர் கனிச்சீர்ப பின்னு
நிறுத்துகண மிவ்விரண்டா மகவற் சீரின்
நேரீறு வெள்ளைசசீர் நிரைவஞ் சிச்சீர்
சிறப்புடையிவ் விரண்டுமாங் கணப்பேர் மற்றுந்
திகழியற்சீ ரயன்றிருக்கொக் கருடன் முன்னும்
வெறுத்தபின்னு மாமென்ப விறைவ னட்கு
மேவுகண நாட்பொருத்தம் வேண்டு மாலோ.

இபபா வென்னுதலிற்றோவெனின், முற்சொன்ன கணத்துக்கு இன்னும் ஒருவிகற்பமுணர்த்திற்று.

(இ-ள.) இந்திரகணம் சந்திரகணம் அந்தரகணம் சூரியகணம் இந்நான்கு கணத்திற்கு முரியசீராவன: தேமாங்காய் புளிமாஙகாய் கருவிளஙகாய் கூவிளங்காயென்பது. வாயுக்கணம் தீக்கணம் நிலக்கணம் நீர்க்கணம் இந்நான்கு கணத்திற்கு முரிய சீராவன: தேமாங்கனி புளிமாங்கனி கருவிளஙகனி கூவிளஙகனி யென்பது. இவற்றுள், இநதிரகணமும் சந்திரகணமும் நிலக்கணமும நீர்ககணமுமாம்; இநத நான்குகணமும் நேர் நேர் தேமா, நிரை நேர் புளிமா, நிரை நிரை கருவிளம், நேர் நிரை கூவிளம்; அன்றியும், இநதநான்கு சீருக்கு உதாரணமாவன:— அயன்கணம், திருக்கணம், கொக்கணம், கருடகணம்; இவைநான்கும் வைக்கப்பெறு மென்றவாறு. (கய)

ஆவதுமங் கலத்தேற்ற பரியாயச்சொ
லடைகொடுத்து முதற்சீருக் கடுத்த செய்யுண்
மேவுமுத லிடைகடைமங் கலச்சொல் வைத்தல்
விதியெழுத்துப பால்வருண மயங்கு மென்ப
வாவுமிரு நாற்கதியான் முன்னோர் நூலின்
மங்கலத்தா னஞ்சுசில வமுத மாகுந்
தூவமுத மெனிற்கதியிற் பழுது போமேற்
றொடர்கலப்பா மரபினது தொடக்கஞ் சொல்வாம்.

இப்பா வென்னுதலிற்றோவெனின், வழுவாகா தென்பதுணர்த்திற்று.

(இ-ள்.) மஙகலத்துக்கேற்ற பரியாயசசொல்லால் முதற்சீருக்கு எடுத்த மஙகலசசொல் செய்யுள் முதலினும் இடையினும் ஈற்றினும்வைத்தல் விதிசெய்யுட் குரித்தென்பது. இவற்றுள், எழுத்தும் பாலும் வருணமும் மயஙகுமென்பாருமுளர். இருவகையாகிய நாற்கதியினுலும் மேலோர்சொன்ன நூலின்மஙகலத்தினலும்சிலநஞ்செழுத்து அமுதவெழுத்தாம்; அதிலுங் கதியினலுஞ் செய்யுளிடம்பாடாகப் பாமரபின் முறையே முதற்றொடஙகிச் சொல்வரென்றவாறு. (கக)

பொருத்தவியல் முற்றிற்று.



மரபியல்.



துறுகொலைநீக் கித்தெய்வக் காப்பாய்ச் சுற்றத்
தொகையளவு வகுப்பகவல் விருத்தந் தன்னால்
முறைகாப்புச் செங்கீரை தால்சப் பாணி
முத்தம்வா ரானையம் புலியி னோடு
சிறுபறைசிற் றிற்சிறுதே ரிவைபின் மூன்றுந்
தெரிவையர்க்குப் பெறுகழங்கம் மானை யூசல்
பெறுமூன்று முதலிருபத் தொன்று ளொற்றைப்
பெறுந்திங்க டனிற்பிள்ளைக் கவியைக் கொள்ளே.

(இ-ள்.) கொலைநீக்கித் தெய்வங்காப்பாய வகுப்பினாலும், ஆசிரிய விருத்தத்தினாலும், காப்பு செங்கீரை தால் சப்பாணி முத்தம் வாரானை அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேர் இவை பத்தும் ஆண்பாற்காகும்; பெண்பாற்குச் சிறுபறை சிற்றில் சிறு தேர் இவைமூன்றும் நீக்கிக் கழங்கு அம்மானை ஊசல் மூன்றுங் கூட்டிப் பிறந்த மூன்றுமாதமுதல் இருபத்தொரு மாதத்திற் குள்ளே ஒற்றைப்பட்டமாதத்திற் பிள்ளைக்கவிக்கொள்வது ()

கொண்டபுயந் தவமதங்கம் மானை காலங்
குறங்களிசம் பிரதமறம் பாண்கார் தூது
வண்டுதழை கைக்கிளைசித் திரங்க ளூசல்
மடக்குமருட் பாவகவல் விருத்தம் வெண்பா
வெண்டுறைவஞ் சித்துறையா சிரியம வஞ்சி
விருத்தப்பாக் கலியினமந் தாதி யாகக்
கண்டவைமுன் னாதியொரு போகு வெண்பாக்
கலித்துறைநேர் கூறல்கலம் பகமா மன்றே.

(இ-ள்.) முன்னே யொருபோகும் இரண்டாவது வெண் பாவும் மூன்றாவது கலித்துறையும்வர மற்றவை இன்ன விடத்தி லின்னது ஆகுமென்னும் நியமமில்லாமற் புயவகுப்பு முதலாகவும் மடக்கீறாகவும் மருட்பாமுதலாகச் சொன்னபாவு மினமும்வர அந்தாதியாகப் பாடுவது கலம்பகமாம். (உ)

அன்புறுதே வர்க்குநூ றிழிவைந் தையாக்
கரசர்க்குத் தொண்ணூறு வணிகர்க் கைம்பா
னின்புறுமுப் பானுழவர்க் கமைச்சி னுள்ளோர்க்
கெழுபதெனுங் கலம்பகத்தம் மானை யூசல்
முன்பொருபோ கொழித்ததுபன் மணிமா லைப்பேர்
மொழிவெள்ளை நூறுகலித் துறைநூ றுதல்
நன்குறிலந் தாதிகலித் துறைநா னூறாய்
நடப்பதகப் பொருட்கோவை நாம மன்றே.

(இ-ள்) முன்சொன்ன கலம்பகம் தேவர்க்கு நூறு, முனியீசுரர்க்குத தொண்ணூற்றைநது, அரசர்க்குத் தொண்ணூறு, மநதிரிகட்கெழுபது, வணிகர்க கைம்பது, உழவர்க்கு முப்பது பாடவேண்டும். கலம்பகத்தில் அம்மானை ஊசல் ஒருபோகு ஒழித்துப்பாடுவது பன்மணிமாலை. வெண்பாவாதல் கலித்துறையாதல் நூறுபாடில் அநதாதி. அகப்பொருள்மேற் கலித்துறை நானூறு பாடிற் கோவையாம். (ங)

மன்னிருபான் வெள்ளைகலித் துறையி ரட்டை
மணிமாலை நூறுவெள்ளை யகவல் வஞ்சி
பின்புகலித் துறையதிணை மணிமா லைப்பேர்
பேசகவல் வெள்ளைகலித் துறைமுப் பானுற்
சொன்னதுமும் மணிக்கோவை வகுப்பு முப்பான்
சூழொலியந் தாதிவெள்ளை யகவற் பாவாற்
பன்னுமிரு பாவிருப திவையந் தாதி
பயோதரங்கண் ணுரைத்திடலப் பேர்ப்பத் தாமால்.

(இ-ள்.) இரட்டை மணிமாலை முதலியவற்றை இச்சூத் திரத் திறத்தானுணர்க. (ச)

பத்தியல்வெண் பாவின்மலை நதிநா டூர்தார்
பரிகளிறு கொடிமுரசு செங்கோல் பாடின்
மெத்துதசாங் கப்பத்தாந் தசாங்கந் தன்னை
வெண்பாவாற் றெண்ணூறேழ் பஃது முப்பா

ணித்தகைமை மொழிவதுசின் னப்பூ வாகு
மெழிற்கொடைசெங் கோனூர் வில்வாள் வேன்மா
அத்திதனிற் றனியகவல் விருத்தம் பத்தா
லறைவிருத்த விலக்கணமா மமுதச் சொல்லாய்.

(இ-ள்) இச்சூத்திரத்தால் தாசாஙகம்பத்தும் சின்னப் பூவும் விருத்தவிலககணமு முணர்க. (௫)

சொற்கலித்தா ழிசையகவல் விருத்த மாதல்
சுற்றமுடன் ருழிசையாய்ச சொல்வ தூசல்
வற்கவுயிர் கசதநப மவவெட் டின்சூழ்
மருவகவல் வரின்வருக்க மாலை வெள்ளை
நற்கலியின் றுறையகவ லந்தா தித்த
நடைமுபபான் மும்மணிமா லைபபேர் மேலோ
ரொற்கமிலா சிரியவிருத் தத்தைக் கூட்டி
லொருநாற்பான் நான்மணிமாலைக்கென் றோதே.

(இ-ள்.) இசசூத்திரத்தா லூசலும், வருக்கமாலையும், மும் மணிமாலையும், நான்மணிமாலையு முணர்க. (௬)

ஓதும்வெள்ளை கலித்துறையா சிரிய மன்பா
வுறுவிருத்தம் வகுப்பைநதா லுரைக்கி லமம
கோதிலலங் காரபஞ்ச கம்பே ரெட்டுக்
குலவகவல் விருத்தமுறு தெய்வங் காப்பா
மீதட்ட மங்கலமிப படியொன் பானு
மெத்துநவ மணிமாலை யெப்பாட் டேனுந்
தீதிலொரு பாவொருபா வொருபஃ தென்ப
செப்பிவைக ளுன்கையுமந் தாதி தன்னால்.

(இ-ள்.) இதனு லலங்காரப்பஞ்சகமும், அட்டமஙகல மும், நவமணிமாலையும், ஒருபாவொருபஃது முணர்க. (௭)

அகவல்விருத் தம்வகுப் பாதல்பத் தாதி
† யந்தநூ றுரும்பல் சந்த மாலை
புகழகவ லாற்புலவர் பாணர் கூத்தர
பொருநர்முத லவருரையாற் றெதிர்ப்பா டாகப்
பகருமதாற் றுப்படையாங் கலிவெண் பாவாற்
பாதாதி கேசங்கே சாதி பாத
மகிழவுரைத் திடிலந்தப் பேரா மந்த
வகையுரைக்கின் வெளிவிருத்தத் தங்க மாலை.

இசசூத்திரத்தால் பல்சந்தமாலையும், ஆற்றுப் படையும், பாதாதிகேசமும், கேசாதிபாதமும், உறுப்புக்களை வெளி விருத்தத்தாலவ்வாறுகூறின் அங்கமாலையாமாறு முணர்க (அ)

மாசில்குல மகளுக்கு வகுப்பு வெண்பா
வருபொருளொன் பாஞென்பா ஞகப் பாடிற்
றேசுயர்மங் கலவள்ளை வேந்தர்க் குண்மை
திகழ்கீர்த்தி யுரைப்பதுமெய்க் கீர்த்தி வஞ்சி
பேசுகுணப் பேரடுக்கி மடவார்க் கோதிற்
பெரும்புகழ்ச்சி மாலையப் படியாண் பாற்கு
மாசகல வுரைக்கிலது நாம மாலை
வருங்காம மொருதலைக்கைக் கிளைய தாகும்.

இச்சூத்திரத்தால் மங்கலவள்ளையும், மெய்க்கீர்த்திமாலையும், புகழ்சசிமாலையும், நாமமாலையும், கைக்கிளையுமுணர்க. ()

குழமகனை யடையாளங் கலிவெண் பாவாற்
கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
ஏழிற்பேதை பதினென்று பெதும்பை பன்மூன்
றியன்மங்கை பத்தொன்பான் மடந்தை யைஙைங்

† அந்தநூறந்தாதி என்றும் பாடமுண்டு.

தழுகரிவை முப்பதஃதோர் தெரிவை நாற்பா
ஞம்வயது பேரிளமபெண் முதலா யுள்ளோா
தொழவுலாப் போந்ததுலா தலைவன் போக்குத்[ல்லே.
† தொடையெதுகை யொன்றிலின்ப மடலாய்ச்சொ

இசரூத்திரததால் உலாவும் வளமடலு முணர்க. (ய)

‡ சொன்னமா தரைக்கண்டு கனவிற் சேர்ந்தோன்
றுணிவன்மட லென்றதுலா மடல்பாங் கற்கு
†† ளின்னலுரைத் திடுதலனு ராக மாலை
யிருதிணையை விடாது நான்கு முன்பாப்
பன்னுபொரு ளிடங்காலந் தொழின்முப் பானாற்
பானெழுபான் தொண்ணூறு நூறுல் வெண்பா
மன்னுகலித் துறையாதல் புகலப பேரான்
மாலையுமா மெண்ணூனு மருவுமபேராம்.

இசரூத்திரத்தால் உலாமடலும, அனுராகமாலையும், தூதும், நானூற்பதும், மாலையு முணர்க. (கக)

மகிழ்நிரைகொள் வதுவெட்சி கரநதை மீட்டன்
மாற்றூர்பாற் செலல்வஞ்சி யூன்றல் காஞ்சி
பகர்மதிலைக் காக்குமது நொசசி சுற்றிய
படைவளைத்த லுழிஞைபொரல் தும்பை வென்று
புகழ்படைத்தல் வாகையது மாலைப் பேராற்
‡‡ புகலுமது மாலையுமாப் புகல்வர் தானை
யகலமுறைப் பதுதானை மாலை தூசி
யணிவகுப்பிற் றூரகைமா லையைச்சொல் லாய்ந்தே.

---

† சொல்லெதுகை யொன்றின்வள மடலாயச சொல்லாய என்றும் பாடமுண்டு.

‡ சொன்னலமா என்றும் பாடமுண்டு.

†† ளின்புறுதலுணர்த்த என்றும் பாடமுண்டு.

‡‡ போற்றுவது என்றும் பாடமுண்டு.

இசசூதிரத்தால் வெட்சிமுதலிய பத்து மாலையுங காண்க (கஉ)

ஆய்ந்ததசப் பிராதுறப வமபத் தான
வரிபிறப்பா சிரியவிருத் தத்தால் வாழ்த்தில்
ஏய்நதிடுநா ழிகைவெண்பா மன்னர்ககீசாக
கெய்தியநா ழிகைவெண்பா நாலெட்டாய்சசொல்
வாய்ந்தசெருக் களவஞ்சி களத்தைக் கூறல்
வரலாற்று வஞ்சிபல வரலா ரேருதல்
பாய்ந்திடுமும மதத்தானைத் தொழிலேனர் கொல்லுமம
படைக்களிறறைக் கண்டரசன் பற்றிச் சேர்தல்.

இச்சூத்திரததால் தசப்பிரா துற்பவமும், நாழிகை வெண்பாவும், செருககளவஞ்சியும, வரலாற்றுவஞ்சியும், யானை வஞ்சியு முணர்க. (கங)

படைபுக்கா யிரவேழும் மெதிரார் போரிற்
படபபோாசெய் தானுக்குக் கடவுள வாழ்த்துங்
கடைதிறபபுப பாலைநிலங் காளி கோட்டங்
கழுதுநிலை காளிக்குப பேய்சசொல் பேய்க்குத்
தொடாகாளி சொலலதனுந் றலைவன் கீர்த்தி
சொல்லலவன் சேறல்புறப பொருடோன் றப்போ
ரடுதல்களம விரும்பலிவை நாற்சீ ராதி
யடியிரண்டி லேறுமற் பரணி பாடே.

இசசூத்திரத்தால் பரணியென்னும் பிரபந்தம் பாடும்விதமுணர்க. (கச)

பாடுநெறி வணககம்வாழ்த் தொன்று நாலாய்ப
பகர்பொருண்முன் வரவிறைவன் வெற்பு வேலை
நாடுநகா பருவமிரு சுடாபெண் வேட்டல
நண்ணன்முடி பொழிலபுனலா டல்கள் ளுண்டல்

கூடுமகிழ் வூடலுணி புதல்வர்ப் பேறு
கூறிடுமந் திரந்தூது செலல்போர் வென்றி
நீடுசந்தித் தொடர்ச்சிசுவை பாவந தோன்ற
நிகழ்த்திலம்ப முதற்பெருங்காப பியத்துக் கம்மா.

(இ-ள்) தெய்வவணக்கம் வாழ்த்து வருபொருளுரைத்த லென்னு மிவற்றிலொன்றும் பலவுஞ் சிறப்புடைத்தாக முன்னே வருதலையுடைத்தா யறம்பொருளின்பம் வீடென்னும் நாற்பொருளினையும் பயக்குமொழுகலாற்றினை யுடைத்தாய்த் தனக்கு ஒப்பாரு மிக்காருமில்லாத தலைவனையுடைத்தாய் மலைவருணனையுங கடல்வருணனையும் நாட்டுவருணனையும் நகரவருணனையும் இருது வருணனையும் ஆதித்தோதயவருணனையுஞ் சநதிரோதயவருணனையு மென்றின்ன வருணனையுடைத்தாய்ப் பெண்வேட்டல் மணம்புணர்தல் முடிசூடல் பொழில்நுகர்தல் புனல்விளையாடல் கள்ளுண்டல் கூடுதலின் மகிழ்ச்சி யூடுதல்புலவி துனியென்னுங காமமகிழ்ச்சி புதல்வரைப் பெறுதல் மநதிரமிருத்தல் தூதுவிடல் மேற்செலவு செருசசெய்கை வென்றியெய்துதல் சந்திபோலத் தொடர்வுபட்டுசசுவையென்னும் அலங்காரமுடைத்தாய எட்டுவகைப்பட்ட † மெய்ப்பாட்டு மேம்பாட்டுகுறிப்பு மிடைவிடாமற் கேட்போர் மதிக்க இலம்பகமென்றுதல் சருக்கமென்றுதல் பரிச்சேத மென்றுதல் பாகுபட்டு இவ்வகைத்தாயப் புலவராற் புனையப்படுந தன்மையது பெருஙகாப்பிய மென்றவாறு (கரு)

அறையுமிதிற் சிலகுறைபா டெனினுங் குன்று
தறம்பொருளின் பம்வீட்டிற் குறைபா டாகப்
பெறுவதுகாப பியமாகும் புராண மாகும்
பேசின்முத னூல்பொருளோ டளவு தன்மை

---

† புறத்துக் கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சினகட்டோன்றிய விகாரத்தின் விளைவு மெய்ப்பாடெனப்படும்.

செறிமிகுதி செய்வித்தோன் கருத்த னானுந்
திகழுமிடு குறியானு நூற்குப் பேரா
முறுகலிவஞ் சிப்பாக்கை யறத்துக் காகா
வுரைப்பதினி வாழ்த்தினுக்கெப பாவு மாமே.

(இ-ள்.) முன்சொன்னவுறுப்பிற் சில குறைந்துவரினும் அறமுதல் நான்கினுங் குறைபாடின்றிவரிற் பெருங்காப்பியத திற்பிறழ்ந்ததன் றென்பது. அறம்பொருளின்பம் வீடென் னும் நானகினும் ஒன்றும் பலவுங் குறைந்துவருவது காப்பிய மென்றும் புராணமென்றும் கொள்ளப்படும் விதப்பால் பெருங்காப்பியங் காப்பியமென்பன: ஒரு திறச்செயயுளா னும் பலதிறச செய்யுளானும் உரைவிரவியும் பிறபாடை விர வியும் வருதலுடைய; விரவாது செல்யுளான்வருவதே சிறப் புடைத்தென்க. முதனூலானும், பொருளானும், அளவானும், தன்மையானும், மிகுதியானும், செயவிததோனானுங, கருத்த னானும, இடுகுறியானும் நூற்குப்பெயராம். அவற்றுள், முதல் நூலாற் பெயர்பெற்றன ஆசிரியப்படலம பாரதமுதலாயின; பொருளாற் பெயர்பெற்றன அகநானூறு, புறநானூறு முத லாயின; அளவாற் பெயர்பெற்றன பன்னிருபடலம், நாலடி நானூறுமுதலாயின; தன்மையாற் பெயர்பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின; மிகுதியாற்பெயர்பெற்றன களவியல் முதலாயின; செயவித்தோனாற் பெயர்பெற்றன சாதவாகனம், இளந்திரைய முதலாயின, கருத்தனாற் பெயா பெற்றன அகத்தியம், தொல்காப்பிய முதலாயின; இடுகுறி யாற் பெயர்பெற்றன நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலா யின. கையறத்துக்குக் கலிப்பாவும் வஞ்சிப்பாவுமாகா. வாழ்த துக்கு எல்லாப்பாவுமா மென்றவாறு. (கரு)

பாடுமுறை தொடர்செய்யு டெரிக்க வல்ல
பாவலனற் குணங்குலஞ்சீ ரொழுக்க மேன்மை
நீடழகு சமயநூல் பிறநூன் மற்று
நிகழ்த்துநா லிலக்கணநாற் கவியுள் ளானும்

நாடுறுப்பிற் குறைவிலனாய் நோயி லானாய்
நாற்பொருளு முணர்ந்துகலை தெளிந்து முப்பான்
சு டும்வய திகழ்ந்தெழுபான் வயதி மேலாக்
குறியுடைய னாகிலவன் கவிதை கொள்ளே. (௧௭)

கொள்ளுமிடம் விதானித்துத் தொடைய ஞாற்றிக்
கொடிகதலி தோரணம்பா லிகைநீர்க் கும்பந்
துள்ளுபொரி விளக்கொளிர முரசி யம்பத்
தோகையர்பல் லாண்டிசைப்ப மறையோர் வாழ்த்த
வெள்ளைமலர்த் துகில்புனைந்து தவிசின் மேவி
வேறுமொரு தவிசிருந்திச் செய்யுள் கேட்டே
யுள்ளமகிழ் பொன்புவிபூ ணாடை மற்று
முதவியே முடிபுலவ னுடன்போய் மீளே. (௧௮)

உடம்படச்செய் யான்செய்யுட் பிறர்பாற் கூறி
லுற்றதிரு வவனிடைப்போ யொதுங்கு மன்றித்
திடம்பெறச்செய் யுள்வரைந்து செம்பூச் சூட்டித்
தெருவுமயா னம்புற்றுக் காளி கோட்டத்
திடந்தனிலங் கவன்றன்னை நினைந்து சுட்டா
லீராறு திங்கடனி லிறுதி யாவன்
தொடர்ந்துசெயா துளநொந்தாற் சுற்றத் தோடுந்
தொலைவனிஃ துண்மையகத் தியன்றன் சொல்லே.

அகத்தியன்சொல் லெழுத்துமுதற் குற்றஞ் செய்யுட்
கமையாமற் றொடைகொண்டா லடையுஞ் செல்வ
மகத்துயர்நோ யகலுமக லாது சுற்றம்
வாணாளு மதிகமவழி மரபு நீடுந்
தொகைக்குற்றம் பட்டிடிற்செல் வம்போம் நோயாஞ்
சுற்றமறு மரணமுறுஞ் சோருங் காலுஞ்
சகத்தவர்க்கீ தன்றியே தேவர்க் காகிற்
றப்பாதிப் பலன்கவிதை சாற்றி னோர்க்கே.


இச்சூத்திரங்களின் பொருளை "சொல்லின் முடிவினப் பொருள் முடித்த"லென்னுந் தந்திர வுத்தியாற் காண்க. ()

மரபியல் முற்றிற்று.


வெண்பா.

சிதம்பரப் பாட்டியலைச் செய்தான றமிழாற்
சிதம்பரபு ராணமுதற் செய்து—விதமபெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்றவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் றான்.





நவநீதப்பாட்டியல்



கட்டளைக் கலித்துறை.

கரிமுகத் தண்ணல் கடவுள ரைங்கரக் கற்பகத்தைப்
பரிவுரை மாமலர் சாத்திப் பணிந்துள பாவினத்தை
யரிமத ஞான நவநீத னென்னு மியான்வகுத்தேன்
உரைசெய் நவநீதப் பாட்டிய றன்னை யுலகினுக்கே.

கார்கொண்ட மேனி கறைகொண்ட நேமி கமலக்கண்ணன், பார்கொண்ட பாதத்தை யேத்திப் பகருவன் பாட்டியலைத், தேர்கொண்ட வல்குற் றுடிகொண்ட சிற்றிடைச் செந்துவர்வாய், வார்கொண்ட பூண்முலை வேல்கொண்ட வாள்விழி வாணுதலே.

இப்பா வென்னுதலிற்றோவெனின் சிறப்புப்பாயிரமும் மகடூஉ முன்னிலையுமுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) மேகவண்ணமாயிருக்குந் திருமேனியும் சத்துருக்களைச சயித்து இரத்தந் தோய்ந்திருக்குஞ் சக்கராயுதத்தையும் தாமரைப்பூவையொத்த கண்களையு முடையவனான நாராயணனது பூமியையளந்த திருவடியைத் தோத்திரம்பண்ணிப் பாவும் பாவினமும் கூட்டிப்பாடப்பட்ட பிரபந்தங்களுக்கு இலக்கணஞ்சொல்லுவன். தேர்போன்ற அல்குலையும் துடியொக்குமிடையினையும் சிவந்தபவழம்போலும் வாயையும் கச்சடர்ந்த முலையையும் வேல்போன்ற விழியையும் அழகிய நுதலையுமுடையாய் கேட்பாயாகவென்றவாறு.

இதனுள் மகடூஉ முன்னிலை யென்று சொல்லுவது யாரையோவெனின், கூறுநும்:—சத்திதேவியைச் சேவிக்கும் பெண்கள் பதினறுபேருண்டு.

அவர்கள் 1 மாலினி, 2. மோகினி, 3 யோகினி, 4 போகினி, 5. ஊணி, 6. பராயணி, 7. காபாலி, 8. காலயோசனி, 9 அற்புதை, 10 அசிதை, 11 வாமலை, 12 மாயி, 13. வராகி, 14. ஆரணி, 15 நாரணி, 16. காளியென்று சொல்லப்பட்ட பதினறு சத்திகளாவர், அவர்களுள் அதிக பாக்கியமுள்ள மாலினிசத்தியே யிலக்கணங்களுக்கு முனனிலையாக வைக்கப்படுவ தென்றவாறு. (க)

நூற்பெயர் நூல்செய்த வாரியன் றன்பெயர் நூலவிளங்கித், தோற்படச் செய்தற்குக் காரணம் யாப்புத் தொன் னூலின்வழி, பாற்படு மெல்லை யுடனே பயனிவை யுஞ்சிறப்பு, மேற்படு பாயிர மென்று சிரியர்கள் வேண்டுவரே.

(இ-ள்) யாதானும் ஒரு நூலுரைக்குமிடதது நூற்பெயரும், ஆக்கியோன் பெயரும், காரணமும், யாப்பும், வழியும், அளவும், பயனு முரைப்பது சிறப்புப் பாயிரமென்று சொல்லுவர் புலவரென்றவாறு. (உ)

எட்டிய வெண்ணெண் கலையோ டியலிசை நாடகமுங், காட்டிய போதக் குறுமுனி யாகக் கலைஞர்கண்ட, பாட்டிய லானவை யெல்லாந் தொகுத்தான் பயன்படவே, நாட்டிய வேதத் தவனவ † நாட்டு நவநீதனே.

(இ-ள்) தொகுத்துள்ள அறுபதது நான்கு கலைகளையும் ஆராயநது, இயலிசை நாடகமென்னு முத்தமிழையு முரைதத குறுமுனியாகிய அகத்திய முனிவன் திருவாக்கினின் றுண்டாகிய பாட்டியலென்னும் நூலினை விரிநத நூலுணர்வோர்க்குப் பயன்படுமாறு பாட்டியலென்று தொகுத் துரைத்தான். நவநாட்டரிபத்த னென்னும் சிறப்புப்பேருடைய ஆசிர்வாதமுள்ள நவநீதனென்னும் இயற்பெயரை யுடையா னென்றவாறு. (ந)

† நீத நடனென்பனே என்றும் பாடமுண்டு.

சகத்தினின் முத்தமிழ் தம்மையுண் டாக்கியச் சங்கத்தினி, லகத்திய மாமுனி யாக்கிய பாட்டிய லான பௌவ, நிகழ்த்துகை மின்மினி யாதித்த னுக்கு நிக ரொக்குமென்,று கப்பது போலுமென் றேபுல வோர் முன் னுரைபபதுவே.

(இ-ள்) உலகத்தில் அகத்திய பகவான் முதற் சஙகம் கபாடபுரத்தி லுண்டாக்கிய காலத்தில் அச் சஙகப் பலகையி லேறினவர்கள் நாலாயிரத்துத் தொள்ளாயிரவரும், நடுச்சங்கம் உத்தர மதுரையிலுண்டாககியகாலத்தில் அசசஙகப்பலகையி லேறினவர்கள் நானூற்றுத தொண்ணூறுபேரும், கடைச சங்கஞ்சிறுமதுரையிலுண்டாக்கியகாலததி லசசஙகப்பலகையி லேறினவர்கள் நாற்பத தொனபதுபேரும், ஆக முசசஙகத்திலு மேறினவர்கள் ஐயாயிரதது நானூற்று முப்பததொன்பதின்ம ராவர். அவர்கள் ஆய்நத இநதப் பாட்டியலை நானுரைப்ப தென்போல வென்னில் ஆதித்தன் பிரகாசத்துக்கு மின்மினி சமமாக வேண்டுமென்று எண்ணுவதற் கொப்பாகு மென்ற வாறு. (௪)

பாயிரமும் அவையடக்கமு முற்று.



நூல்.

மங்கலஞ் சொல்லெழுத் தெண்ணிய தானம் வரு மிருபாற், பொங்கிய வுண்டி வருணம் பருத்திடு நாட் பொருத்தங், தங்கிய நாற்கதி யெண்கண மென்று தமிழ்தெரிநதோ, ரிங்கிவை பத்து முதன்மொழிக் காமென் றியம்புவரே.

(இ-ள்) ஒருவன் ஒரு பிரபநதம பாடுமிடத்து மஙகலப் பொருத்தமும், சொற்பொருத்தமும், எழுத்துப் பொருதத மும், தானப் பொருத்தமும், பாற்பொருத்தமும், உண்டிப் பொருத்தமும, வருணப்பொருத்தமும, நாட்பொருத்தமும்,

கதிப்பொருத்தமும், கணப்பொருத்தமும என்று சொல்லப் பட்ட பத்துவகைப்பொருத்தமு முதற் சீர்க்கணிருக்கவேண்டு மென்று சொல்லுவர் புலவ ரென்றவாறு (க)

திருமணி பூத்திங்கள் சொற்சீ ரெழுத்துப்பொன் றேரழகு, வருபுனல் கார்புயல மாநிலங் கங்கை மலை யுலகம, பரிகடல் யானை பரிதி யமுதம பகர்முதற்சீ, ருரியன மங்கலச் சொல்லென நாவல ரோதினரே.

(என்பது) மஙகலப் பொருததமாமா றுணர்த்துத னுத லிற்று

(இ-ள்.) திரு மணி பூ திஙகள் சொல் சீர் எழுதது பொன் தேர் அழகு புனல் கார் புயல் மா நிலம் கஙகை மலை உலகம பரி கடல் யானை பரிதி அமுதம என்னும இந்தப் புகழ்ச சொற்களை ஒரு பிரபந்தததிற்கு முதற் சீர்க்கண் வைக்கலாம் வைக்குமிடத்துத் தலைவன்பெயர் முதலெழுத்துக்கும் பிர பந்தமுதற்சீர் முதலெழுத்துக்கும் மற்ற வொன்பதுபொருத்த மும் உண்டாக மஙகலசசொல்லை வைத்தல் வேண்டும் இப் படி வைத்துப்பாடுவது மஙகலப்பொருதத மென்றவாறு. (உ)

கங்கையு மானுங் கடுக்கையுந திங்களுங் கற் புடைய, அங்க முகினிற வண்ணனுமம வேலையிற் றொல்கதிரு, மைங்கரத் தற்புதன் றன்னையு மாறு முகத்தனையும், பங்கயத் தோனையுங் கூறுக பாவிற் பரி வுடனே.

(என்பது)சொற்பொருத்தமாமாறுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) ஒரு பிரபநதம் பாடுமிடத்து முதற்கண் காலை முதலாகிய சொற்கள் வராமற் கஙகையும், மானும், கடுக்கை மாலையும, சந்திரனையும் தரித்திருக்கிற சிவனையும், நெடுமாலை யும், சூரியனையும், விநாயகனையும், ஆறுமுகனை சுப்பிரமணி யனையும், பிரமனையும் முன்னாக வைததுப் பாடவேண்டு மென்றவாறு (ங)

மூன்றைந்தே ழொன்ப தெழுத்தாய் வியனிலை யாய்முதற்சீர், தோன்றிய நன்றிரண் டீரிரண் டாறெட் டெழுத்துந் தொன்னூல், சான்றவர் கொள்ளார் சம னிலை யாமென்று தாழ்குழையை, மான்றரு கோல மதர்விழி யோட்டிய வாணுதலே.

(என்பது.) எழுத்துப் பொருத்தமாமா றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) ஒரு பிரபந்தம் பாடுமிடத்து மங்கல மொழி முதற்சீர்க்கு ஒற்றுட்பட மூன்றெழுத்தும், ஐந்தெழுத்தும், ஏழெழுத்தும், ஒன்பதெழுத்தும் வைக்கலாம். இரண்டெழுத்தும், நாலெழுத்தும், ஆறெழுத்தும் எட்டெழுத்தும் வைக்க லாகா தென்றவாறு. (ச)

குறிலைந்துந் தந்நெடிற் கூடி அ இ உ எ ஒக் கொண்டடைவே, முறைமையிற் பாலன் குமார னரசனு மூப்புடனே, தறுசேர் மரணமென் றைந்து வகைப்பட்ட தானமுமா, மறமுறுமூன்றுநன் றும்பின் னிரண்டுமா காவென்னுமே.

(என்பது) தானப் பொருத்தமாமா றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்.) முதற்சீர் முதலெழுத்தாகக் கூடிவரும் உயிரெழுத்தாவது அ ஆ பாலன்; இ ஈ ஐ குமாரன்; உ ஊ ஔ அரசன்; எ ஏ மூப்பு; ஒ ஓ மரணம் இந்தப் பன்னிரண்டு உயிருமாம. தமக்கொத்த நெடிலுடனே சேர்ந்து இகரத்துடனே ஐகாரஞ்சேர்ந்து உகரத்துடனே ஔகாரம் சேர்ந்து அ இ உ எ ஒ என்னும் ஐந்து குறிலும் (முறையே) பால குமார ராச மூப்பு மரணமாம். இது பார்க்கும்வகை:—பாட்டுடைத் தலைவன்பேர் முதலெழுத்துயிரும் பிரபந்தத்தின் முதற்சீர் முதலெழுத்துயிரும் ஒரெழுத்தாகிற் பாலனும்; இரண்டா முயிராகிற் குமாரனும்; மூன்றாமுயிராகில் அரசனும்; நான்கா முயிராகில் மூப்பாம்; ஐந்தா முயிராகில் மரணமாம்; இப்படி ஐந்து

தானமும் அறிக. இவற்றுள், டாலன் குமாரன் இராசன் என்னு மிந்த மூன்றுமாகும மூப்பு மரணம் எனனு மிந்த இரண்டும் ஆகா. இப்படி யல்லாமல் மூப்பும் மரணமும் முதன் மொழியில் வைததால் "நிலையிற் குலைதல் செல்வ நீஙகுதல், கொலையிற் பிணியிற் கூடுத லாகும்" எனறு இநதிர காளி யென்னும் ஆசிரியரால் சொல்லப்பட்ட தென்றவாறு (ரு)

குற்றெழுத் தாணு மகடூஉ நெடிலின மென்று கொள்வார், மற்றெழுத் தாமுயிர் மெய்குறி லாணெடி லவ்வகையே, யொற்றெழுத் தாய்த மலியென்று பாட் டின்முன் னொதவொட்டார், பொற்றொடி சிற்றிடைப் போர்வேலி னன்பர் புணர்முலையே.

(என்பது) இருபாற் பொருத்தமாமா றுணர்த்துத லுத லிற்று.

(இ-ள்.) குற்றெழுத் தைந்தும் ஆண்பால்; நெட்டெழுத் தேழும பெணபால்; மற்ற உயிாமெய்யெழுததும அவ்வகையே குறிலாணும் நெடில் பெண்ணும் எனபது ஒற்றெழுத்தும் ஆயதவெழுத்தும் அலியெழுதது; இவை பாட்டின் முதற் சீர்க்கு ஆகா வென்றவாறு. (சு)

சாற்றுந் தலைவ னவணியற் பேர்க்குத் தகும் வகையே, தோற்று வியன்வரி லானநத மாகுஞ்சொல் லாவெழுத்தா, மேற்ற வெழுத்து வரிற்பேட தென்ப திபற்பெயாக்கே, யாற்றும் பொருத்த மனைத்துஞ் சம னிலை யாமென்பரே.

(இ-ள்) பாட்டுடைத் தலைவன் பேர் முதலெழுத்து ஆண்பா லெழுததாகில் பிரபநதசசெய்யுள் முதலெழுத்துக்கு ஆண்பாலெழுத்துரியது; பெண்பா லெழுத்தாகிற் பெண்பா லெழுத்துரியது; அல்லாமல் மயஙகி ஆண்பா லெழுத்துக்குப் பெண்பாலெழுத்தும் பெண்பா லெழுத்துக்கு ஆண்பாலெழுத் தும் வரிற் பேடென்று தள்ளப்படும். ஆதலால் மயங்கினு வாய்வராமற் சமனிலையாய்வரி லுத்தம மென்றவாறு. (எ)

பாருங் கசத நபமவ்வும் வவ்வும் பகர்ந்தவுயிர், சேரு மகர முதனு லெழுத்துந திகழமுதஞ், சீருந தசாங்கத தியலுகரு மாமெனச செப்பினர்மைக, காரு மறலு மிருளோபு நேர்குழற் காரிகையே.

(என்பது) உண்டிப் பொருததமாமா றுணர்த்துத னுத லிற்று

(இ-ள்) உண்டிப் பொருத்தமாவது க ச த ந ப ம வ என் னும் எழுத்தும் அ இ உ எ என்னும் நான்குமாகப் பதினே ரெழுத்தும் அமுதமாகும். அவை யெவைக்கு அமுதமாமென் னில் பிரபநதமுதற்சீர்க்கும தசாஙக வருணனைக்கும் ஆமென்று சொல்லுவ ரென்றவாறு. (அ)

விதியவன் முன்னுன் குயிர்தரச் செய்தான் விரி சடையோன், றுதிநார ணன்செவ்வே ளிநதிரன் ஞாலங்கள் சூழவருங், கதிரவன் சோமன் றருமன் வரு ணன்கனகநிதி, பதியவ னென்றிவர் மூவா றுடம்பு படைத்தனரே.

(என்பது.) வருணப் பொருத்தமாமா றுணர்த்துத னுத லிற்று.

(இ-ள்) வருணப் பொருத்தமாவது:—அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்னும் பன்னிரண்டெழுததும் பிரமன் படைத்தான்; க ங அரன் படைத்தான்; ச ஞ மால்படைத் தான்; ட ண செவ்வேள் படைத்தான்; த ந இந்திரன்படைத தான்; ப ம ஆதித்தன் படைத்தான்; ய ர சநதிரன் படைத் தான்; ல வ நமன் படைத்தான்; ழ ள வருணன் படைத் தான்; ற ன குபேரன் படைத்தான். இப்படியே யுயிர்பன்னி ரண்டும், மெய் பதினெட்டும் ஆக முப்பதெழுததுக்குந தேவ தைகளையறிக என்றவாறு. (௯)

அயனரன் மாலயி லாளன்கண் டான்மறை யாந தணாக்குப், புயலூ ரவன்கதி ரிநதுங்கண் டானிப்பூ பாலருக்கே, யியனிதி யோனந் தகனுங்கண் டானவ்

வசியருக்கு, வியனுறு வேலையன் கன்டன ளுகுமவே ளாளருககே.

(என்பது) பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திர ரென்னு மிநத நான்கு சாதிக்கும எழுததுகளுந தேவதை களுமாமா றுணர்ததுத னுதலிற்று.

(இ-ள்) உயிரபன்னிரணடுமெ க ங ச ஞ ட ண எனனும் ஆறும் பிராமணருக்குரிய; இவாகளுக்குப் பிரபநத முதற்சீரி விநதவெழுததுககளைவைத்துப்பாடுக, இவாக்குததேவதைஅய னும், அரனும், மாலும், முருகனும காககவெனறுபாடுக. த ந ப ம ய ர எனனும் ஆறு எழுததும க்ஷத்திரியருக குரிய; இவர்களுக்கு இநத வெழுத்துக்களை வைத்துப்பாடுக, இவாக் குத தேவதை இநதிரன் சூரியனா சநதிரன காக்கவெனறு பாடுக. ல வ ற ன எனனும நாலெழுத்தும் வைசியருககுரிய; இவர்களுக்கு இநத வெழுததுக்களை வைததுப்பாடுக; இவர்க் குத தேவதை குபேரனும் இயமனுங காககவென்று பாடுக ழ ள என்னு மிரண்டுமே வேளாளருககுரிய, இவாகளுக்கு இந்த வெழுததுககளை வைத்துப் பாடுக; இவர்கருத தேவதை வரு ணன் காக்க வென்றுபாடுக. இவ்வாறுரைததது யாரோ வென்னி விநதிரகாளியனு ரென்றவாறு. (கo)

வெண்பா

அந்தணர்க்கு நாலா றரசாக் கிருபதா
மிந்த விரலணிகர்க் கெண்ணிரண்டா—முந்துவிரல்
வேளாளர்க கீருறும் வெளளேடு வேயனைய
தோளா யறிநீ தொகுநது.

(என்பது) ஏடளவாமாமா றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பிராமணருக்கு இருபத்துநான்கு விரற்கடை யேடு, க்ஷத்திரியருக்கு இருபது விரற்கடையேடு, வைசியருக் குப் பதினறு விரற்கடையேடு, சூத்திரருக்குப் பன்னிரண்டு விரற்கடையேடாகச்சேர்ததுப் பிரபநதங்கள் எழுதிச்சொல்ல வேண்டுமென்றுகல்லாடனார் சொன்னு ரென்றவாறு (கக)

அகர முதனான்குங் கார்த்திகை யாமற் றவற்றினிடை
உகர முதலைந்து பூராட மாமென வோதுவர்காண்
டிகழு மொகர முதன்மூன்று மேயுத்தி ராடமென்பர்
ககர முதனான்கு மோணமென் றோதுவர் கற்றவரே.

(என்பது) நாட்பொருத்தமாமா றுணர்த்துதனுதலிற்று.

(இ-ள்.) அ ஆ இ ஈ கார்த்திகை;உ ஊ எ ஏ ஐ பூராடம்;
ஒ ஓ ஔ உத்திராடம்; க கா கி கீ திருவோணமென்றவாறு.

ஆன்ற குகர முதலிரண் டுந்திரு வாதிரையாம்
போன்ற கெகர முதன்மூன்று மேபுநர் பூசமென்பர்
தானைக் கொகர முதன்மூன்றும் பூச மெனுந்தகையாம்
வானக் கருங்குழல் வம்பார் வனமுலை வாணுதலே.

(இ-ள்.) கு கூ திருவாதிரை, கெ கே கை புநர்பூசம்,
கொ கோ கௌ பூசமென்றவாறு. (கங)

ஏய்ந்த சகர முதனா லெழுத்து மிரேவதியா, மாய்ந்த சுகர முதலைந் தெழுத்து மசுவதியாம், வாய்ந்த சொகர முதன்மூன் றெழுத்தும் பரணியென்பர், † வேய்ந்த ஞகர ஞொகரஞௌ வான தவிட்ட மின்னே.

(இ-ள்.) ச சா சி சீ இரேவதி, சு சூ செ சே சை அசுவதி,
சொ சோ சௌ பரணி, ஞ ஞொ ஞௌ அவிட்டமா மென்ற
வாறு. (கச)

ஓதுந் தகர முயிரிரண் டேழுடன் மூன்றடைவே
சோதி விசாகஞ் சதயமு மாமெனத் தோடைநக
ராதியி லாறு மநுடமல் லாதன வாறெழுத்துப்
பேதமில் கேட்டைபூ ரட்டாதி யாமெனப் பேசுகவே.

---

† வேய்ந்த ஞகரஞா ஞெவென்னு மூன்று மவிட்டமின்
னே என்றும் பாடமுண்டு.